உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

எஸ்சி எண்204/2016

| | | |
|---|---|---|
| பெயர் | .. | கனகலட்சுமி(அசா5) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| ஜாதி | .. | |
| மதம் | .. | |
| வயது | .. | |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2021 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ம்நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
31–08–2021

<u>**முதல் விசாரணை**</u>

நான்விளாத்திகுளம் தாலுகா ஜமீன்கோடாங்கிபட்டியில் குடும்பத்துடன்குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா1 கிருஷ்ணமூர்த்தி எனது சித்தப்பா ஆவார். அசா2 பஞ்சாமிர்தம் எனது சித்தி ஆவார். அசா3 சுப்புலட்சுமி எனது அம்மா ஆவார். அசா4 பாலமுருகன் எனது தம்பி ஆவார். ஆஜர்எதிரி எனது பெரியப்பா ஆவார். 23.08.2015 தேதி இரவு 2.15 மணியளவில் வீட்டில் கரண்ட் கட்டாகிவிட்டது. ஜன்னல்வழியாக பார்த்தபோது மற்றவீடுகளில் கரண்ட் இருந்தது. எனவே கதவை நான்திறந்தேன். அப்போது ஆஜர்எதிரி கையில்வைத்திருந்த பீஸ்கேரியரை கீழேபோட்டுவிட்டு மிளகாய்பொடியைஎடுத்து என்மீது வீசினார். அப்போது ஆஜர்எதிரி வீட்டிற்கு அத்துமீறி நுழைந்து எனது சித்தப்பா கிருஷ்ணமூர்த்தியை பார்த்து எனது மனைவிக்கு சேரவேண்டிய சொத்தை நீ மட்டும் அனுபவிக்க நினைக்கிறாயா எனறுசொல்லி கையில் இருந்த கொடுவாளை எனது சித்தப்பாவை வெட்ட வந்தார். அப்போது எனது சித்தப்பா வலகையால் தடுத்ததால் எனது சித்தப்பாவுக்கு வலது கையில் காயம்எற்பட்டது. அப்போது எனது சித்தி தடுக்க வந்தார். அவருக்கு வலதுகை, இடதுபக்கதலை, மற்றும் இடது உள்ளங்கை

ஆகியவற்றில் காயம்ஏற்பட்டது. எனது அம்மா தடுக்கமுயன்றபோது அவருக்கு இடதுகையில் காயம்ஏற்பட்டது. அப்போது எனது தம்பியும் சித்தப்பாவும் ஆஜர்எதிரியை வீட்டைவிட்டு வெளியே தள்ளிவிட்டார்கள். ஆம்புலன்சிற்குபோன்செய்தோம். ஆம்புலன்ஸ் வந்து கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு காயம்பட்டவர்களை அழைத்துசென்றது. 2,3 நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி